# தம்புள்ள மாநகர சபை
# மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) 2, 3, 5 மற்றும் 9 ஆவது பிரிவுகளில் அமைச்சருக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் 2010 பெப்ரவரி 02 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தம்புள்ள மாநகர சபையின் 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 09 மாத காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 05 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 கொடுக்கல் வாங்கல், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2012 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் 10 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 4,982,628 ஆக இருந்தது.

#### 1.2.2 நிதிக் கட்டுப்பாடு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் 1381001000017068 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்று மாநகர சபை ஸ்தாபிக்கப்பட்ட 2011 ஏப்ரல் தொடக்கம் கணக்காய்வுப் பரிசோதனை சந்தர்ப்பமான 2012 செப்தெம்பர் வரையிலும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தம்புள்ள தகனக்கூடம் மற்றும் தம்புள்ள பஸ் நிலையம் என்பவற்றின் நீர்க் கட்டணப்பட்டியல் செலுத்துதலின் தாமதத்தினால் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட

காரணத்தினால் மீண்டும் இணைப்பைப் பெறுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 18,480 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**1.2.4 போதிய அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆவது பிரிவின் பிரகாரம் நிதி தொடர்பான நிரந்தரக் குழுவினால் முன்னரே கவனத்திற் கொள்ளப்பட்டு மாநகர சபைக்கு அறிக்கையிடும் வரை மாநகர சபையினால் எந்நிதி தொடர்பான விடயத்திற்காகவும் முடிவாகச் செயற்பட முடியாதிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது கொள்வனவுகளுக்காகச் செய்யப்பட்ட ரூபா 1,045,248 தொகையான செலவினம் தொடர்பாக அந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**1.2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 139(4) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட ரூபா 28,519 தொகையான கொடுப்பனவுகளுக்கான பற்றுச்சீட்டுக்கள் பெறப்படாதிருந்ததுடன் உரிய பணம் பெறப்பட்டமைக்காக கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் உரியவர்களின் கையொப்பம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 237(ஆ) இன் பிரகாரம் பொருட்கள் பெறப்பட்டமைக்கு உரிய பொருட் பதிவேடு, இருப்புப் புத்தகம் போன்றவற்றில் அப்பொருட்கள் உள்ளடக்கப்பட்டமைக்கான சான்றுகள் இன்றி மீளாய்வாண்டில் 18 சந்தர்ப்பங்களில் கொள்வனவுகளுக்காக ரூபா 760,698 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(இ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 இன் பிரகாரம் கொடுப்பனவுகளை அங்கீகரிக்காமலும் உறுதிப்படுத்தாமலும் மீளாய்வாண்டில் 09 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,932,148 தொகை செலவிடப்பட்டிருந்தன.

(ஈ) 2011 இன் பாதீட்டில் ஏற்பாடு செய்யப்படாமல் மீளாய்வாண்டில் தளபாடம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,305,252 தொகையானது செலவின இல. 11511 இன் பெயரில் பிழையாக செலவின விடயத்தில் வரவு வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

### 1.2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரக் கட்டணங்களிலிருந்து அறவிடப்பட்ட பெறுமதி சேர்வரி ரூபா 137,820 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் சபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 29 ஆந் திகதி தம்புள்ள பிரதேச சபையின் மோட்டார் கிரேடர் தம்புள்ள மாநகர சபைக்குரிய CPGU - 3007 ஆம் இலக்க கலி வாகனத்தை உடைத்தமையினால் கலி வாகனத்திற்கு ரூபா 87,500 நட்டம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104 (1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிருவாகம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு